This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# விடிவதற்குள் வா

www.writersujatha.com

நாகர்கோவிலுக்குப் பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கும்போது—திருவனந்த—புரத்திலிருந்து சொல்கிறேன்—நடுவே 'ஆஹா இங்கே இறங்கிவிடலாம் போலத் தோன்றுகிறதே' என்று தோன்றும் இடத்தில்தான் மணற்காடு கிராமம் இருக்கிறது, இறங்கிவிடுங்கள். இங்கிந்தே அரபிக்கடலின் அலைகள் மௌன வெண்மைச் சுருட்டல்களாகத் தெரிகின்றன. சர்ச் தெரிகிறது. புதுசாகப் பெயிண்ட் அடிக்கப்பட்டு மண்டையில் மணி வைத்துக் கொண்டிருக்கிறது. சர்ச்சுக்குப் பின்னால் தென்னை மரத் தோப்புகள் காற்றுக்குச் சலுகை தந்து லேசாக அசைந்து கொண்டிருக்கின்றன. மத்தியான சூரியன் மணலில் ஜிகினாக் காகிதத்தைப் பதித்தது போல் மின்னுகிறது.

மெல்ல நெருங்கலாம். பஸ்ஸிலிருந்து இறங்கின உடனே கடற்கரையில் ஓஸோன் மணத்தை உணர்கிறீர்கள். இது உங்களுக்குப் பழக வேண்டும். ஈர வாசனையும் இல்லாமல் மண் வாசனையும் இல்லாமல் ஒருவிதமான நடு நாற்றம்.

மணற்காட்டுக்குப் போகிற பாதையில் டைட்டேனியம் தொழிற்சாலை உருவாகிக் கொண்டிருக்கிறது. சர்க்கார் கோடி கோடியாக இரைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பேப்பரில் பார்த்திருப்பீர்களே, இதுதான். மணற்படுகையில் ரோடு போட்டிருக்கிறார்கள். மெகா உயர ஆஸ்பெஸ்டாஸ் கூரையின் கீழ் அமெரிக்க மிஷின்களை நிமிர்த்திக் கொண்டிருக்கிறார்கள். வெல்டிங் வெளிச்சம் பகலிலும் பளபளக்கிறது.

இந்த டைட்டேனிய நாகரிகம் இன்னும் மணற்காடுவரை வரவில்லை. அதோ மணற்காடு தென்னஞ் சோலைக்குள் தூங்கிக்கொண்டிருக்கிறது!

மெயின் ரோடிலிருந்து பிரியும் இடத்தில் டீக்கடை இருக்கிறது. அதில் யாரும் டீ சாப்பிடவில்லை. ஓனர் மட்டும் ஒரு 'நாஷனல் பானஸோனி'க்கை ஏறக்குறைய அணைத்துக் கொண்டு கன்னடப் பாட்டுப் புரியாவிட்டாலும் சிலோன் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

ஊருக்குள் வந்து விட்டோம், வரிசையாக சுமார் முப்பது வீடுகள் தெரிகின்றன. அத்தனையும் மழைக்குப் பயந்த முன் சரிவு வீடுகள், சந்தடியே இல்லை. கோயில் தெரிகிறது. அதன் விசால வாசலில் பூசைக்காரர் முழங்கையில் தலை வைத்துப் படுத்துக்கொண்டிருக்கிறார். எழுப்பவேண்டாம். கோவில் வாசலில் ஒரு பலசரக்குக் கடையில் சோப்புக்கட்டி, பெருங்காயம், வாசனைத் தைலம், மிளகாய், நிரோத், நோவினோ பாட்டரி, இன்லண்ட் லெட்டர், கோந்துப் பசை எல்லாம் இருக்கிறது. கடைக்காரரைத்தான் காணோம். நம்மூரா இருந்தால் இந்நேரம் திருட்டுப் போயிருக்கும்.

போஸ்ட் ஆபீசில் கம்பத்தில் கட்டின தபால் பெட்டியில் அடுத்த கிளியரன்ஸ் நாளைக்குத்தான். தட்டி கட்டின போஸ்டரில் எம். ஜி.ஆர். படகோட்டி புதிய காப்பியில்